# மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிவிப்பு!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

**பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி - நாள் :11.12.2024 புதன்கிழமை**

| நேரம் | ஒன்றியம்/பேரூர்/ சார்பு அணி | நிகழ்ச்சி ஏற்பாடு | நலத்திட்ட உதவிகள் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காலை 8.30 மணி | மாவட்ட விவசாய அணி சார்பாக | திரு.மா.குமரவேல் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் | குண்டல்பட்டி லிட்டில் ஸ்டார் மனநலம் குன்றியவர் நலவாழ்வு மையத்தில் உள்ள 65 நபர்களுக்கு உணவு வழங்குதல் |
| காலை 9.00 மணி | காரிமங்கலம் கிழக்கு | திரு.T.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர் | அடிலம் ஊராட்சியில் முதியோர்களுக்கு மற்றும் துப்புறப்பணியாளர்கள் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் உணவு வழங்குதல் |
| காலை 10.00 மணி | காரிமங்கலம் பேரூர் | திரு.K.V.K.சீனிவாசன், பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி துணை தலைவர் | காரிமங்கலம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள 600 மாணவர்களுக்கு நோட்டு, பேனா வழங்குதல். |
| காலை 10.30 மணி | காரிமங்கலம் மத்தியம் | திரு.இல.கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் | பொம்மஅள்ளி நடுநிலைப்பள்ளி 100 மாணவர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில் வழங்குதல். மற்றும் முதியோருக்கு 100 வேட்டி, சேலைகள் வழங்குதல், துப்புரவு பணியாளர்கள் 50 நபர்களுக்கு சீருடை வழங்குதல் |
| காலை 11.00 மணி | மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பாக | திரு.ர.கண்ணபெருமாள், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் | கொடியேற்றுதல், முக்குளம் ஏரியில் 1048 மரக்கன்றுகள் நடுதல், 1000 நபர்களுக்கு உணவளித்தல். |
| காலை 11.30 மணி | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக | திரு.ப.ஆனந்தன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் | ஜெர்த்தலாவ் ஊராட்சி, சிக்கார்த்தணஅள்ளியில் கைப்பந்துப் போட்டி நடத்துதல் மற்றும் பரிசளித்தல். |
| மதியம் 12.00 மணி | மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பாக | திரு.தொ.சந்திரசேகரன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் | வெள்ளிச்சந்தையில் முதியோர், எளியோர் மற்றும் 500 பெண்களுக்கு நலத்திட்ட உதவி வழங்குதல் |
| மதியம் 12.30 மணி | காரிமங்கலம் மேற்கு | திரு.M.V.T.கோபால் ஒன்றிய கழக செயலாளர் | ஜிட்டாண்டஅள்ளி ஊராட்சியில் எளியோர்க்கு நலத்திட்ட உதவி வழங்குதல் |
| மதியம் 1.00 மணி | பாலக்கோடு மேற்கு | திரு.பாம்பே சக்தி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு துணை அமைப்பாளர் | பஞ்சப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி 1000 மாணவர்களுக்கு நோட்டு பேனா, பென்சில் வழங்குதல் |
| மதியம் 2.00 மணி | மாவட்ட மீனவர் அணி சார்பாக | திரு.S.M.அருள்பிரகாஷ் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் | சாமனூர் ஊராட்சியில் ஏழை எளியோர்களுக்கு 200 வேட்டி, சேலைகள் வழங்குதல், மற்றும் உணவு வழங்குதல் |
| மதியம் 2.30 மணி | பாலக்கோடு மேற்கு | திரு.P.K.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர் | சிக்கதோரணபெட்டகம் ஊராட்சி, சின்னகும்மனூரில் கழக கொடியேற்றி ஏழை எளியோர்க்கு 200 வேட்டி சேலைகள் மற்றும் உணவு வழங்குதல் |
| பிற்பகல் 3.00 மணி | மாவட்ட நெசவாளர் அணி சார்பாக | திரு.பா.ராஜபார்ட் ரங்கதுரை மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் | மாரண்டஅள்ளி மேல்நிலைப்பள்ளியில் இரத்த தானம் முகாம் நடத்துதல் |
| பிற்பகல் 3.30 மணி | மாரண்டஅள்ளி பேரூர் | திரு.M.A.வெங்கடேசன் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர், மாரண்டஹள்ளி | மாரண்டஅள்ளி தொடக்கபள்ளி மாணவர்களுக்கு குறிப்பேடு , பேனா, பென்சில் வழங்குதல் |
| மாலை 4.00 மணி | மாவட்ட மாணவர் அணி சார்பாக | திரு.மா.சந்தர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ; | பி.செட்டிஅள்ளி ஊராட்சி ஏழை எளியோர்களுக்கு 200 வேட்டி, சேலைகள் வழங்குதல் மற்றும் உணவு வழங்குதல் |
| மாலை 4.30 மணி | பாலக்கோடு மத்தியம் | திரு.S.முனியப்பன், ஒன்றிய கழக செயலாளர் ; | கணபதி ஊராட்சி, பெல்ராம்பட்டியில் ஏழை எளியோர்க்கு 250 வேட்டி, சேலைகள் மற்றும் உணவு வழங்குதல் |
| மாலை 5.00 மணி | பாலக்கோடு பேரூர் | திரு.P.K.முரளி, பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் பாலக்கோடு. | பாலக்கோடு பேரூராட்சி ஏழை எளியோருக்கு 500 வேட்டி, சேலைகள் வழங்குதல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், இடம்: பேருந்து நிலையம் |
| மாலை 5.30 மணி | மாவட்ட தொழிலாளர் அணி சார்பாக | திரு.ரா.சண்முகம், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் | தும்பலஅள்ளி அணைப்பகுதி இலங்கை தமிழர் 215 குடும்பங்களுக்கு போர்வைகள் வழங்குதல் |

எனவே தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக நிலை முகவர்கள்(BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள்(BLC), பாக இளைஞர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள தேவையான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர். பி. பழனியப்பன்**
செயலாளர், தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

இரயில்வே திருத்த சட்டம் 2024 மீதான விவாதம்!

# சரக்கு ரயில்களின் வேகம் கூட்டப்பட வேண்டும்!

## மக்களவையில் தங்கதமிழ்ச் செல்வன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 7–

மக்களவையில் கழக உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் பேசியதாவது:–

முதலில், புதிய குற்றவியல் சட்டம் மற்றும் விமானச் சட்டம் போன்றவற்றை சமஸ்கிருதத்தில் மாற்றியது போல் இந்த சட்டத்தின் பெயரையாவது மாற்றாமல் இருந்ததற்கு ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த உரையை துவங்குகிறேன்.

**இரயில்வே திருத்த சட்டம் 2024, நோக்கம்:**

இரயில்வே வாரியச் சட்டம் (Railways Board Act), 1905, இரயில்வே சட்டம் (Railways Act), 1989 ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்துவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கமாக காணப்படுகிறது.

**தமிழ் மொழி பேசும் ஊழியர்கள்:**

இந்த மசோதாவில் அத்தியாயம் 1Aவில் இரயில்வே வாரியம் (Railway Board) பற்றி கூறப்பட்டுள்ளது. இதில் தலைவர், செயலாளர், மேலாளர்கள் மற்றும் பிற பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது. இதில் எனது கோரிக்கை என்னவென்றால், அந்த



அந்த இடத்திற்கு ஏற்ப அந்த பகுதியில் பேசும் மொழி தெரிந்த பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தென்னக இரயில்வே பெரும்பாலும் தமிழகம் மற்றும் கேரளாவை உள்ளடக்கியதால், தென் மண்டல பொது மேலாளர் தமிழ் அல்லது மலையாளம் தெரிந்தவராக இருக்க வேண்டும். டிக்கெட் கவுண்டரில் உள்ள பணியாளர்களுக்கும் கூட தமிழ் மொழி தெரிந்திருக்க வேண்டும். இதே போல் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாக, சரக்கு ரயில்கள் தற்போது மணிக்கு 35 Kms வேகத்தில் தான் செல்கின்றன. இதை 70 Kms ஆக உயர்த்தினால் சரக்குகள் விரைவாக சென்றடையும். இது நாட்டிற்கு கூடுதல் வருவாயை ஈட்டித்தரும்.

**திண்டுக்கல் to சபரிமலை இரயில் பாதை:**

டிக்கெட் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளதால் இரயில்வே நஷ்டத்தில் இயங்குவதாகவும் வருவாய் இல்லை என்றும் ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால் சரக்கு இரயில்களின் வேகத்தை அதிகரிப்பது போலவும், திண்டுக்கல் முதல் சபரிமலை வரை புதிய இரயில் பாதை அமைப்பது போன்ற திட்டங்களையும் செயல்படுத்தினால் உச்சகட்ட காலத்தில் ஒரு கோடி பக்தர்களும், மாதந்தோறும் லட்சக்கணக்கான மக்களும் பயணிப்பார்கள். மேலும் இந்த பாதை விவசாய நிலமான தேனியை கடந்து செல்வதால், பல்வேறு விளைபொருட்களின் போக்குவரத்திற்கும் உதவும். இது போன்ற திட்டங்களால் இரயில்வேயின் வருவாய் உயரும், மக்களும் பயனடைவார்கள்.

மேலும், எனது தொகுதியில் உள்ள சோழவந்தான் போன்ற இடங்களில் இரயில் நிறுத்தம் அமைத்தால், போக்குவரத்து சிரமத்தால் அவதிப்படும் அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். இரயில்வேக்கும் வருவாய் கிடைக்கும்.

அதுபோல ஈரோடு to பழனி புதிய ரயில் பாதை மற்றும் காட்பாடி ரயில் நிலைய மறுசீரமைப்பு, பெர்மாபலூர் ரயில் பாதை போன்ற முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் தாமதம் மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் பாதிக்கப்பட்டு, இணைப்பு மற்றும் பயணிகள் அனுபவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இது போன்ற திட்டங்கள் இரயில்வேயின் வருவாயை அதிகரிக்க செயல்படுத்தப்பட வேண்டும்.

Kavaach System: அடுத்ததாக, இந்தியா முழுவதும் கவச் (தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு) நிறுவ ஒன்றிய அரசு 800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால் இது சரியாக செயல்படுத்தப்படவில்லை. ரயில் விபத்துகளை தடுக்க கவச் அமைப்பை எல்லா இடங்களிலும் நிறுவ வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**இரயில்களின் பெயர்கள்:**

காங்கிரஸ் ஆட்சியில் பாண்டியன், சேரன், சோழன், பொதிகை என ரயில்களுக்கு பெயர் வைத்தனர். ஆனால் இந்த பாஜக அரசு வந்தே பாரத், நமோ பாரத், தேஜஸ் என பெயர் வைப்பது அந்த அந்த பகுதியில் பேசும் மொழிகளுக்கும் மாநிலங்களுக்கும் முக்கியத்துவம் தராததை காட்டுகிறது.

**பெண் ரயில் ஓட்டுநர்களின் நலன்:**

மக்கள் பொதுத்துறை மற்றும் பொதுச்சேவைகள் ஆணையம், பெண் ரயில் ஓட்டுநர்கள் குழந்தை பிறப்புக்கு பின் ஆறு மாதங்களில் பணிக்குத் திரும்ப வேண்டிய நிலை மற்றும் மாதவிடாய் விடுப்பு மறுக்கப்படுவது குறித்த கவலைகளை எழுப்பியது. தமிழக முதல்வர் அரசு ஊழியர்களுக்கு 1 வருடம் மகப்பேறு விடுப்பு அளித்துள்ளது அதை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசும் இது போன்ற திட்டங்களை மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

16 மணி நேர பணிக்குப் பின் 30 மணி நேர தொடர்ச்சியான ஓய்வு வேண்டும் என்ற கோரிக்கை மற்றும் ரயில் ஓட்டுநர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம், வாரத்திற்கு 48 மணி நேரமாக பணி நேரத்தைக் குறைக்க பரிந்துரை.

**தண்டவாள பராமரிப்பு:**

2022ஆம் ஆண்டு தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அறிக்கையின்படி, 20 சதவீதத்திற்கும் அதிகமான ரயில் தண்டவாளங்கள் அவற்றின் வடிவமைப்பு ஆயுட்காலத்தை தாண்டியுள்ளன, இது ரயில் தடம் புரள்வதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. இதை கருத்தில் கொண்டு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மண்டலங்களுக்கு சுயாட்சி:**

இறுதியாக, இந்த மசோதாவில் இரயில்வே வாரியச் சட்டம் 1905, இரயில்வே சட்டம் 1989 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்தியுள்ளீர்கள். இதில் எனது பரிந்துரை என்னவென்றால், மண்டலங்களுக்கு(Zones) தன்னாட்சி வழங்க வேண்டும். அவர்களை சுதந்திரமாக முடிவெடுக்க விடுங்கள். இது உள்ளூர் தேவைகளை புரிந்து கொள்ளவும், கோரிக்கைகளை நிறைவேற்றவும் உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் தலைமையேற்று, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட, பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் நாட்டு மங்களம் ஊராட்சி கொன்னைக்காடு பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் அறந்தாங்கி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ந. சண்முகம்**
**டிசம்பர் 7 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தொண்டர் படையில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கிளைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருநரையூர் ஊராட்சி மன்றத் தலைவர், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சித்தமல்லி ந.சோமசுந்தரம்**
**டிசம்பர் 7 (2022)**



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.